<u>கொடுக்கப்பட்ட சொற்களைக் கொண்டு கடிதத்தை நிறைவு செய்க.</u>

நிஷா,
எண் 125, ஜாலான் மாவார்,
தாமான் பீடி உத்தாமா,
71000 போர்ட்டிக்சன்,
நெகிரி செம்பிலான்.

அன்புத் தோழி மோனேஸ்க்கு,

வணக்கம். நான் இங்கு ______________________________ இருக்கிறேன். உன் நலமறிய அவா. உன் மடல் பெற்றேன். நான் பெரிதும் ___________________________. நீ விரும்பிக் கேட்ட விவரங்களைப் பற்றி எழுத ___________________________.

கடந்த சனிக்கிழமை நானும் என் குடும்பத்தாரும் குவந்தானில் அமைந்திருக்கும் அழகிய _______________________ சென்றோம். அந்த நீர்வீழ்ச்சி பகாங் மாநிலத்தின் _______________________ குவந்தானிலிருந்து 11.6 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. நாங்கள் அதிகாலையிலேயே வீட்டிலிருந்து புறப்பட்டோம். நாங்கள் அவ்விடத்தை ஐந்து மணி நேரப் _______________________ பிறகு சென்றடைந்தோம்.

நீர்வீழ்ச்சி அமைந்துள்ள இடம் ________________________ எழிலும் நிறைந்தது. அது செல்வோரின் மனதைப் பெரிதும் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. மலைப் பகுதியிலிருந்து பாய்ந்து வரும் ஆறு, பாறைகளின் மீது படிப்படியாக வீழ்ந்து,

LIVEWORKSHEETS

பல ____________________________ போன்று காட்சி அளிக்கின்றது. உயர்ந்த மலைப் பகுதியிலிருந்து ________________________ வருவதால் அதன் நீர் குளிர்ச்சியாக இருக்கின்றது. அருவி நீர் பல்வகை செடி கொடிகளை மோதி வருவதால் அதற்கு ____________________________ உள்ளது என்று சுற்றுப்பயணிகள் கருதுகின்றனர். ஆகவே, அந்த நீரில் குளித்து ____________________________.

உள்நாட்டு , ______________________ சுற்றுப்பயணிகள் அதிகமாக இங்கு வருகின்றனர். பொது விடுமுறை காலங்களில் மக்கள் கூட்டம் ____________________________ காணப்படும். __________________________________ வசதிக்காகப் பல கடைகள் கட்டப்பட்டுள்ளன. அரசாங்கம் சுற்றுப்பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கப் பல திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

இப்பயணம் என் ____________________________ நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது. நீ இங்கு வரும்பொழுது தவறாமல் உன்னை அங்கு அழைத்துச் செல்வேன். நீயும் மகிழ்ச்சி அடைவாய். உன் பெற்றோரையும் உன் தம்பி தங்கைகளையும் நலம் விசாரித்தாகச் சொல். விடைபெறுகிறேன். நன்றி.

உன் அன்புத் தோழி,
*நிஷா*

| | | |
|---|---|---|
| நோய் தடுப்புச் சக்தி | சுற்றுப்பயணிகள் | மகிழ்ச்சியடைந்தேன் |
| இயற்கை வளமும் | அகமகிழ்கின்றனர் | நீர் வீழ்ச்சிக்குச் |
| தலைநகரமான | புற்றீசல் போல் | பயணத்திற்குப் |
| விழைகின்றேன் | சிறு அருவிகள் | வெளிநாட்டுச் |
| மனதில் | நலமாக | ஊற்றெடுத்து |

LIVEWORKSHEETS